1980 பிப்ரவரி 5]

திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அந்த மருத்துவ மனையைத் திறப்பதற்கான கோரிக்கை இருந்து கொண்டே இருக்கிறது. அப்படியிருந்தும் திறக்கப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைச்சர் அவர்களிடத்தில் நேரிலேயும் விண்ணப்பம் மூலமாகவும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். இருந்தும் அந்த மருத்துவ மனையைத் திறப்பதற்குத்தாமதம் ஏற்படுகிறது. ஏன் அந்தத் தாமதத்தைப் போக்க அந்த மனக் குறையை நீக்காமல் இருக்கிறார்கள்? உடனடியாக அந்த மருத்துவமனையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து உத்திர விடுவார்களா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அதனுடைய தீர்மானம் நாள் 22—11—1973-ல் பிடாகம் பஞ்சாயத்தில் (எலவனாசூர்கோட்டை) ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தவும் அதற்காக பங்குத் தொகை கொடுக்கவும் தெரிவித்துள்ளது மேற்குறித்த இடத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் ஒதுக்கீடு மற்றும் கால்நடை மருந்தகம் தற்காலிகமாக இயங்க வாடகை கட்டடம் கொடுப்பதற்காகவும் நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானங்கள் இப்போது தான் வந்துள்ளன. நிச்சயமாக இந்த ஆண்டுக்குள் அந்த மருந்தகம் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சுவேதநதியின் குறுக்கே பாலம்.

*வினா எண். 60—திரு. செ.மெ. இராஜு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் 74 கிருஷ்ணாபுரம் ஊரின் அருகே உள்ள சுவேத நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :— (அ) இல்லை.

(ஆ) வினாவிற்க இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].